## 'கேலோ இந்தியா' விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம்

# தமிழ்நாடு புதிய வரலாறு படைக்கும்!

## 'கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி 2023'- தொடக்க விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!



**சென்னை, ஜன.21-**

**கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம் தமிழ்நாடு புதிய வரலாறு படைக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.**

**கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.**

**அது வருமாறு:-**

தமிழ்நாடு அரசு சார்பாக இந்த விழாவுக்கு உங்களை எல்லாம் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

'கேலோ இந்தியா 2023' போட்டிகளைத் தொடங்கி வைக்க வந்துள்ள பிரதமர் அவர்களை வருக வருக என்று வரவேற்கிறேன். அதைப்போலவே, தமிழ்நாடு ஆளுநர் அவர்களையும் வரவேற்கிறேன்.

மேலும் இந்த விளையாட்டு விழா இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதற்குக் காரணமாக இருக்கும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வரவேற்பதில் பெருமை அடைகிறேன்.

ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை, இளையோர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் அவர்களே,

ஒன்றிய இளையோர் விவகாரம் மற்றும் விளையாட்டு இணை அமைச்சர் நிதிஷ் பிரமாணிக் அவர்களே,

ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் அவர்களே,

ஒன்றிய அமைச்சர்களே, தமிழ்நாடு அமைச்சர்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே,

தமிழ்நாடு அரசு முதன்மை செயலாளர் சிவ்தாஸ் மீனா ஐ.ஏ.எஸ் அவர்களே,

தமிழ்நாடு அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் முதன்மை செயலாளர் அதுல்யா மிஸ்ரா அவர்களே,

மரியாதைக்குரிய தமிழ்நாடு அரசுத் துறை செயலாளர்களே, ஒன்றிய அரசு அதிகாரிகளே, தமிழ்நாடு அரசு அதிகாரிகளே, பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகளே, சிறப்பு விருந்தினர்களே, விளையாட்டு வீரர்களே, விளையாட்டு ஆர்வலர்களே, விளையாட்டு சங்கங்களே,

இந்தத் தொடக்க விழாவில் பல்வேறு திறன்களை வெளிக்காட்டவுள்ள மாணவர்களே, கலைஞர்களே, காவல்துறை அலுவலர்களே மற்றும் ஊடக நண்பர்களே,

உங்கள் அனைவரையும் 'கேலோ இந்தியா இளையோர் போட்டிகள் 2023 தமிழ்நாடு' நிகழ்வுக்கு வருக வருக என வரவேற்கிறேன்.

### கனவு நனவான தருணம்!

இது கனவு நனவான தருணம். இன்று தமிழ்நாடு '6வது கேலோ இந்தியா இளையோர் போட்டிகள் 2023' நிகழ்வை நடத்துகிறது. திறமை, அர்ப்பணிப்பு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றை பறைசாற்றும் வகையில் 'கேலோ இந்தியா' போட்டிகள் அமைந்துள்ளன.


இந்தச் சமயத்தில் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ள நாட்டின் தலைநகரில் இருந்து வந்துள்ள நமது பிரதமர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தப் போட்டிகள் பிரமாண்டமாக நடைபெற அனைத்து வகையிலும் வழிகாட்டி, ஆதரவு நல்கிய முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

### நான்கே மாதங்களில் ஏற்பாடான போட்டிகள்!

2021ஆம் ஆண்டு முதல் நாங்கள் பல்வேறு தேசிய, சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறோம். 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை மிகக் குறைந்த காலத்தில் வெற்றிகரமாக மாமல்லபுரத்தில் நடத்தினோம்.

அதுபோன்ற போட்டிகளை நடத்துவது என்றால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஓராண்டுக்கு மேலாகும். ஆனால் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் வெறும் நான்கே மாதங்களில் மேற்கொள்ளப்பட்டன. அது விளையாட்டுத் துறையில் எங்களுக்கு உள்ள திறமையை பறைசாற்றுவதாக அமைந்தது.

செஸ் போட்டிகளைப் பற்றிப் பேசும் போது பிரக்ஞானந்தா, குகேஷ் மற்றும் வைஷாலி ஆகியோர் 2024 உலக செஸ் போட்டியில் விளையாட உள்ளதற்காக என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் போட்டிகளில் முதன்முறையாக இந்தியாவில் இருந்து நிறைய வீரர்கள் கலந்து கொள்கின்றனர். குறிப்பாக நான்கு போட்டியாளர்களில் மூன்று பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.




'கேலோ இந்தியா 2023' விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்த விழாவில் பிரதமர் மோடி அவர்கள் முன்னிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நினைவுப் பரிசை வழங்கி சிறப்பித்தார்.

'கேலோ இந்தியா' போட்டிகள் விளையாட்டு திறன்களை வெளிப்படுத்துவதற்கான மேடையாக மட்டுமல்லாமல், நாட்டின் பல்வேறு கலாசாரங்கள் சங்கமிக்கும் மையமாகவும் உள்ளது.

விளையாட்டுக்கென்று வளமான பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ்நாடு இந்தப் போட்டிகளை நடத்துவதில் பெருமை கொள்கிறது.

> **'கேலோ இந்தியா' போட்டிகள் விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்துவதற்கான மேடையாக மட்டுமல்லாமல், நாட்டின் பல்வேறு கலாச்சாரங்கள் சங்கமிக்கும் மையமாகவும் உள்ளது. விளையாட்டுக்கென்று வளமான பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ்நாடு இந்தப் போட்டிகளை நடத்துவதில் பெருமை கொள்கிறது.**
>
> **எப்படி நம் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு கல்வி, மருத்துவம் எனப் பல துறைகளில் இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறதோ, அதுபோல விளையாட்டுத் துறையிலும் முன்னணியில் இருக்கிறது.**

### விளையாட்டுத் துறையிலும் திராவிட மாடல் ஆட்சி முன்னிலை!

எப்படி நம் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு கல்வி, மருத்துவம் எனப் பல துறைகளில் இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறதோ, அதுபோல விளையாட்டு துறையிலும் முன்னணியில் இருக்கிறது.

செஸ் ஒலிம்பியாட் மட்டுமல்லாது, ஆசியக் கோப்பை ஹாக்கி போட்டிகள், ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டிகள், உலக அலைச்சறுக்கு போட்டிகள், சைக்கிளத்தான், தேசிய ஹாக்கி போட்டிகள் மற்றும் சென்னை செஸ் மாஸ்டர்ஸ் ஆகிய போட்டிகளைக் கடந்த ஆண்டு நடத்தியுள்ளோம்.

பொதுவாக விளையாட்டு திறமைகளை 'எக்ஸ்ட்ரா கரிக்குலர் ஆக்டிவிட்டி' என்பார்கள். ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் அதை 'கோ கரிக்குலர் ஆக்டிவிட்டி'யாக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்.

விளையாட்டு துறையில் புதிய திறமையாளர்களை கண்டறிய கடந்த ஆண்டு முதலமைச்சர் கோப்பை போட்டிகளை நடத்தினோம். அதில் சுமார் மூன்றரை இலட்சத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். இவற்றில் வீரர் வீராங்கனைகள் மட்டுமல்லாது மாணவர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 5 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன.

மேலும் விளையாட்டு வீரர்களின் திறனை மேம்படுத்த 76 புதிய பயிற்றுநர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### பல்வேறு திட்டங்கள் மூலம் ஊக்கத் தொகை!

அது மட்டுமல்ல. விளையாட்டு வீரர்களை மென்மேலும் ஊக்கப்படுத்த எலைட் வீரர்கள் திட்டம், சர்வதேச பதக்க திட்டம் மற்றும் சாம்பியன் மேம்பாட்டு திட்டம் என பல திட்டங்கள் மூலம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

இது தவிர, விளையாட்டு வீரர்களின் திறனை வளர்க்கவும், உள்கட்டமைப்புகளை உருவாக்கவும் 'தமிழ்நாடு சாம்பியன்ஷிப் அறக்கட்டளை' ஒன்றை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்கள். அந்த அறக்கட்டளை மூலம் பெருநிறுவனங்களின் சமூக பொறுப்பு நடவடிக்கைகளின் கீழ் நிதி பெறப்படுகிறது.

அந்த நிதியைக் கொண்டு பொருளாதாரத்தில் நலிந்த விளையாட்டு வீரர்களுக்கு அவர்கள் தேசிய, சர்வதேச போட்டிகளில் கலந்துகொள்ள உதவிகள் வழங்கப்படுகின்றன.

இந்த அறக்கட்டளை மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் சுமார் 6 கோடியே 45 இலட்சம் ரூபாய் பெற்று பயனடைந்துள்ளனர். இந்த அறக்கட்டளைக்காக முதலமைச்சர் அவர்கள் தனது சொந்த நிதியில் இருந்து 5 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளார்கள். இந்த அறக்கட்டளை மூலம் உதவி பெறும் வீரர்கள் தேசிய, சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்று நமது நாட்டுக்குப் பெருமை சேர்க்கிறார்கள்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

### கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்!

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு விரைவில் அனைத்து ஊராட்சிகளுக்கும் 'கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்' (கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்) வழங்க உள்ளோம்.

இவ்வாறு விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குவதால் தமிழ்நாடு, சமீபத்தில் இந்திய தொழில் கூட்டமைப்பின் 'விளையாட்டுத் திறமைகளை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' என்ற விருதை வென்றுள்ளது.

இந்தப் பெருமைகளுக்கு மத்தியில் தான் கேலோ இந்தியா போட்டிகள் இங்கே நடைபெற உள்ளன. 6 ஆயிரம் வீரர்கள், 25 விளையாட்டுகள் என்று நடைபெறும் இந்தப் போட்டிகளை நடத்துவதன் மூலம் தமிழ்நாடு புதிய வரலாறு படைக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இந்தப் புதிய பயணத்தை தொடங்கும் இத்தருணத்தில் விளையாட்டுக்கு ஒற்றுமையை வலுப்படுத்தும் சக்தி உண்டு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்தப் போட்டியில் வீரர்கள் தங்களது முழுத் திறன்களையும் வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் போட்டிகளுக்காக உழைத்த அத்தனை பேருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---



தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டியை தொடங்கி வைப்பதற்காக நேற்று முன்தினம் சென்னை வருகைதந்த பிரதமர் நரேந்திரமோடி அவர்களை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்க வளாகத்தில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா குறித்த புத்தகத்தை வழங்கி வரவேற்றார்.

## 'கேலோ இந்தியா' புதிய சரித்திரம் படைக்கட்டும்!

## தமிழ்நாட்டிலிருந்து சிறந்த வீரர்கள் வந்திருக்கிறார்கள்!

**கே**லோ இந்தியா தொடக்க விழாவில் உரையாற்றிய பிரதமர் மோடி, விஸ்வநாதன் ஆனந்த், பிரக்ஞானந்தா, பாரா ஒலிம்பிக் மாரியப்பன் ஆகிய சிறந்த வீரர்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கிறார்கள் என்று பெருமிதம் தெரிவித்தார்.

தற்போது 13வது கேலோ இந்தியா போட்டி தமிழ்நாட்டின் 4 முக்கிய நகரங்களில் நடைபெறவுள்ளது என்று தெரிவித்த பிரதமர் மோடி, 36 மாநிலங்களின் வீரர், வீராங்கனைகள் இப்போட்டியில் பங்கேற்கிறார்கள் என்று கூறினார்.

அனைத்து வகையான விளையாட்டு வீரர்களும் இங்கே தங்கள் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பை பெற்றுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கேலோ இந்தியா போட்டிக்காக உருவாக்கப்பட்டுள்ள இலச்சினை மிகச்சிறப்பாக அமைந்துள்ளது என்று தெரிவித்த பிரதமர் மோடி, அனைத்துத் தரப்பு மக்களும் திறமைகளை வெளிப்படுத்தி முன்னேற்றம் காண இப்போட்டி வழிவகுக்கிறது என்று கூறினார்.

ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கான சூழலை உருவாக்கி வருகிறோம் என்றும் பிரதமர் மோடி தெரிவித்தார்.

**- பிரதமர் மோடி**

(கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி நேரு ஸ்டேடியம் - 19.01.2024)